ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு 1-0-0.
... கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 25-6—44 | இதழ் 16

# அவசரப்படுங்கள்! அவசரப்படுங்கள்!!

நாம் போய்ச்சேர வேண்டிய இடம் அதிக தூரத்திலிருக்கிறது. நமக்கிருக்கும் நேரமோ கொஞ்சம். அவசரப்படுங்கள் அவசரப்படுங்கள், இடறினாலும் காயம் ஏற்படாது. பஞ்சு விரிப்பின்மீதுதான் ஓடுகிறோம்.

ஆம், புத்துலகச் சிற்பி பெரியார் இராமசாமியின் வீரஉரை இது. தமிழர் தனயர்களே, இளந்தமிழ் வீரர்களே-வீராங்கனைகளே, திராவிட மாணவர்களே யாவரையுந்தான் அழைக்கிறார் திராவிட இன எழுச்சித் தொண்டாற்ற—தமிழர் மறுமலர்ச்சிக்குப் போர்விளைக்க. உங்கள் தனிப்பட்ட வாழ்வைக் காரித்துப்புங்கள்: எந்நகரம் பட்டி தொட்டி எல்லாம் தன்மானக்குரல் எழுப்புங்கள் என்று ஆணையிடுகிறார். நமது கொள்கை நியாயமானது. பஞ்சுவிரிப்புப் போன்றது. அதன்மீது இடறினாலும் காயம் ஏற்படாது. ஆகவே அவசரப்படுங்கள் அவசரப்படுங்கள் என்று முரசு கொட்டுகிறார் பெரியார். இதோ மாணவ உலகம். அந்த வீரமொழியால் விழிப்புணர்ச்சி பெற்றுத் தமிழகத்தைத் தட்டி எழுப்புகிறது. சொல்லாற்றலுஞ் சோர்விலாத் திறனும் படைத்த பல மாணவர்கள் நாடெங்கும் வீரமுழக்கம் புரிகிறார்கள். அவர்களது தன்மான முரசு வட்டாரந்தோறும் ஒலிக்கிறது. அவர்களது அச்சமற்ற கண்டனங்கள் புராணப் புல்லறிவைப் பொசுக்குகின்றன. அவர்களுடைய ஆராய்ச்சி உரைகள் செந்தமிழர் உள்ளத்தில் பகுத்தறிவைத் தூண்டுகின்றன, அவர்களுடைய பிரசாரம் சிந்திக்க மறுத்தவர்க்கும் சீர்திருத்த உணர்ச்சியூட்டுகிறது, ஜாதிமதச் சழக்குகளைத் தவிடு பொடியாக்குகிறது; சீறிடும் உள்ளங்கட்குச் சிரித்தமுகத்துடன் நம் இயக்கக் கருத்துக்களை எடுத்துரைக்கின்றனர். அதிகம் உரைப்பானேன் அந்த உணர்ச்சிஉருவங்கள் வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சியுறச் செய்கின்றன. விசை ஒடிந்த தேகத்திற்கு வன்மையூட்டுகின்றன.

தன்மதிப்பியக்கத் தோழர்கள் யாவருக்கும் ஆணையிடுகிறார் பெரியார் அவசரப்படுங்கள் அவசரப்படுங்கள் என்று. எதற்கு அவசரப்படவேண்டும் என்று விழைகிறீர்? தமிழகத்தில் பரவியிருக்கும் மூடநம்பிக்கையை முறியடிக்க, ஆரிய ஆபாசம் தமிழரது வாழ்க்கையில் விளைத்துள்ள கேட்டை நாட்டினருக்கு நவில, அந்தநாள் முதல் இந்தநாள்வரை ஏமாந்த தமிழரை வைத்துப்பிழைக்கும் பார்ப்பனரின் புரட்டுகளைப் பொதுமக்களுக்கு

மா. குமாரசாமி.

எடுத்துக்காட்ட. உள்ளபடியே பொய்ம்மை வழக்குகளும், பொருளற்ற சடங்குகளும் தமிழர் முற்போக்கைத் தடை செய்வதை இனியும் நாம் பொறுத்திருக்க முடியுமா? வேதபுராண இதிகாசங்களும், அவற்றில் பொதிந்து கிடக்கும் ஆரியக் கடவுளரின் ஆபாசத் திருவிளையாடல்கட்கும், இன்னமும் இந்த நாட்டிலே இடங்கொடுத்துக்கொண்டிருப்பது தகுமா? திராவிடப் பழங்குடி மக்களை, அவர்களது முன்னோர்களை ஆரியத்தை வெறுத்த அந்தநாள் திராவிடர் தலைவர்களைக் குரங்குகள் என்றும் அரக்கர் என்றும் அழகிலார் என்றும் இரக்கமிலார் என்றும் இழிதகவுடையார்என்றும் தாசர்கள், அடிமைகள், தஸ்யூக்கள், சூத்திரர்கள் என்றும் இழித்துரைக்கும் ஏடுகளை இனியும் இந்த நாட்டிலே உலவவிடலாமா? திராவிடரைத் தாழ்த்தியும், ஆரியரை உயர்த்தியும், பொய்யும் புளுகும்புனைந்துகட்டியும், கண்ட இடத்தெல்லாம் காமவெறி கிளப்பியுஞ் செல்வதையே முழுநெறியாகக்கொண்ட கம்பஇராமாயணம் முதலிய "கலை காவியங்களும்" ஆரியனுக்கொரு நீதியும் திராவிடனுக்கொருநீதியும் ஆண்டவனே வகுத்ததாக அறிவுறுத்தும் பெரிய புராணங்களும் பொசுக்கப்படவேண்டாமா? நம்மை நமது இனத்தை இனமூதாதையரை இழித்துப் பழிக்கும் இவற்றை வெறுத்துக் கொளுத்தித் தீய்ப்பதற்குப் பதிலாக இவற்றையே நமக்குரிய ஒழுக்க நூல்களாகவும் மார்க்கபோதனைகளாகவும் மதச் சட்டங்களாகவும் வாழ்க்கை வழிகாட்டிகளாகவும் கொள்ளுகின்ற தவறிய தமிழர் பலர் நம்மிடையே நடமாடுகின்றனரே அவர்கட்கு அறிவுச்சுடர்கொளுத்தவேண்டாமா? இன்பத் திராவிடத்தில் இந்த அநீதிகள் இன்னமும் கொடிகட்டி வாழ வேண்டும் என்று தமிழர் முற்போக்கில் கருத்துடைய யார்தான் கூறமுடியும்?

இனிவரும் உலகத்தில் திராவிடச் சமுதாயம் எழுச்சிபெற்ற வீரஇனமாய்ப் பொலியவேண்டுமானால், விஞ்ஞான அறிவுச்சாலையாய்த் தமிழகம் தலை நிமிர்ந்துலாவவேண்டுமானால், முற்போக்குகளும் கண்டுபிடிப்புகளும், மேல் நாடுகளையும் மிஞ்சிய அளவில் திராவிடநாட்டில் நிகழவேண்டுமானால் "மண்ணன்று நானுமோர் மனிதன்" என்ற வீர உணர்ச்சி தமிழன் உள்ளந்தோறும் கொதித்தெழவேண்டுமானால் உடனடியாக ஒழிக்கப்படவேண்டியவை இவ்வேத புராண இதிகாசங்களும், அதே ஆபாசங்களை அறுசீர் விருத்தமாகவும், கொச்சகக்கலியாகவும், கலிவெண்பாட்டாயும், கட்டளைக்கலித்துறையாயும் காட்டிவைக்கும் இலக்கிய இலக்கணங்களும் கலைகளும்கற்பனைகளும், இந்துமதப்புரட்டும் அதன் கடவுளாகும் கோட்பாடுகளும் அமைப்புகளுமே ஆகும். திராவிட இன எழுச்சியில் ஆர்வமுடைய அனைவரும்இதனை ஒப்புக்கொள்வர் இத்தன்மானமற்ற தன்மை இனி நம் நாட்டிலே அரைக்கணமும் விட்டுவைக்கலாகாதென்று. ஆம், ஆகவேதான் திராவிடர் தந்தையின் தாக்கீது பிறக்கிறது, அவசரப்படுங்கள் அவசரப்படுங்கள் என்று.

பொன்னும் மணியும் கொழித்த திராவிடத்தில் இன்று வறுமையும் வாட்டமும் மிகுந்தது ஏன்? அலைகடல் கடந்தோம், கிரீஸ் நாட்டோடுவாணிபஞ்செய்

(8ம்பக்கம் பார்க்க.)

முத்தமிழ் வாழ்க!

நகைச்சுவை மன்னன். உயர்திரு,

# என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்,

## திருவத்திபுரத்தில் 20-6-44ல் 'கிந்தனார்'

இசைக் கதைச் சொற்பொழிவு நிகழ்த்தியபோது, அன்புடன் மகிழ்ந்து வாசித்தளித்த

# பாராட்டுரை.

**நகைச்சுவை மன்னரே, வருக! வருக!!**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் நம் நாட்டில் மிகப் பழைய காலத்திலேற்றம் பெற்று விளங்கின. பிற்காலத்தில் எவ்விதக் குறைவினாலோ இயற்றமிழ் ஒழிந்து மற்றைய இரு தமிழ்களும் ஒளி குன்றி மங்கின. ஒரு சில யாண்டுகளாக அறிஞர் இசை, நாடகம் ஆகியவற்றைப் பண்டை நிலைக்குக் கொண்டுவர முயல்கின்றனர். ஆயினும் அம்முயற்சி முற்றும் நிறைவேறவில்லை.

நல்ல காலமாக, நம் நாட்டில் பேசும் படக்காட்சி தோன்றிற்று. அதன் சிறந்த உறுப்பாக நகைச் சுவை முன்னிடம் பெறலாயிற்று. அஃதில்லாத காட்சி மாட்சிமையுடையதாகப் பொதுமக்கள் கொள்ள வில்லை. இத்துறையில், இயற்கையாக நகைச்சுவை தோன்ற நடிக்கும் திறமையும், பேசும் வண்மையும், இடத்திற்கேற்றவாறு நடிக்கும் திறமையும், பேசும் வண்மையும், அமையப்பெற்ற தாங்கள் நாடகக் கலைக்குப் புத்துணர்ச்சி அளித்து வருகின்றீர்கள். அன்றியும் தமிழ் மொழியும் தமிழ் மக்களும் இக்கால முறையில் திருத்தம் பெறுதற்காக, நீலகண்டர், கிந்தனார் போன்ற கதைகளைத் தாமே எழுதிப் புதுமுறையில் பொதுமக்களுக்கு நல்லுணர்ச்சி புகட்டி வருதல் போற்றத்தக்கதே. நகைச்சுவை யென்பது தனித்தொரு சுவையேயாயினும், அச்சம், அவலம், வீரம், இளிவரல் முதலிய எட்டுச் சுவைகளினும் அது கலந்து நிற்குமாறு நடிக்கும் தங்கள் திறமையை வியவாதார் எவருமிலர்.

இயல், இசை, நாடகம் என்னும் வைப்பு முறையைத் தாங்கள் நாடகம், இசை, இயல் என முறை பிறழவைத்துவிட்டீர்கள். எங்ஙனமெனில், தாங்கள் நடிக்கும் நாடகத்தால், பெறும் பொருளால் பல இயற்றமிழ்க் கழகங்களும், இசைத் தமிழ்க் கழகங்களும் இயங்கிவருவதால் அறியக் கிடக்கின்றது.

அமெரிக்க நாட்டில் பெயர்பெற்ற நகைச்சுவை மன்னன் சார்லி சாப்ளினைப் போலத் தாங்கள் தென்னாட்டுச் சார்லி சாப்ளினாக விளங்குவது எங்கட்கு மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது. இவற்றிற்கெல்லாம் உறுதுணையாகத் திருவாட்டி டி. ஏ. மதுரம், அம்மையாரைத் தாங்கள் உடன்கொண்டு விளங்குவது சீரிய முறையாகும். தங்கள் நடிப்பால் இன்புறாதார் எவரும் இலர். உணர்ச்சி பெறாதாரும் இலர். எனவே, தாங்கள் நகைச்சுவையொன்றையே அடிப்படையாகக் கொண்டு தமிழர்க்கும், தமிழுக்கும் தொண்டு செய்வதை நாங்கள் பெரிதும் போற்றுகின்றோம்.

தங்கள் நடிப்பு வாழ்க! நகைச்சுவை ஓங்குக! நாடகக் கலை உயர்க! முத்தமிழ் நாட்டில் எங்கும் முழங்குக! தாங்கள் நீடிய வாணாளும் இன்பமும் பெற்றுப் பொதுத் தொண்டில் வீறுபெற்று வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

இங்ஙனம்,

வடார்க்காடு, திருவத்திபுரம்.
20—6—44.

**பாநுகவி மாணவர் கழகத்தார்.**

# வீரவைணவர் வேங்கடசாமி அவர்கட்கு.

"கந்தா! சும்மா ஆடாதே! கூச்சல் போடாதே! குளறிக் குளறிக்கூவாதே! கோணல் சேட்டைகள் செய்யாதே! எதிரிலே வருவோர்மீது மோதாதே! வம்பு செய்யாதே, வா போகலாம்."

"டே, சோம்! யார்டாசொல்றது நான் ஆடறதா! நானுடா சேட்டை செய்கிறேன், நீயாருடா கேக்க. உங்கபாட்டன் வீட்டு ரோட்டா இது! போடா! நான் ஆடுவேன், பாடுவேன், ஓடுவேன், எவனுச்சம் எதாச்சம் பேசினு போடுவேன், யாருக்கடா "ரைட்" இருக்குதுஎன்னைக் கேழ்க்க."

சோமுக்கு அவ்வளவு போதை இல்லை, அளவுடன் குடித்ததால். கந்தனோ, பல கலயங்களைக் காலிசெய்துவிட்டான், வெறி அதிகம், முறையின்றி வீதியிலே புரளவும் பேசவும் தொடங்கினான். போதைமீறி, போக்கு மாறிவிட்டதால், பேச்சு கெட்டுவிட்டது, போலீசிலே பிடிபட்டுவிட்டால் படாதபாடு படுத்துவார்களே என்ற பயம்கொண்ட சோமு, குடி அதிகமாகிவிட்ட கந்தனுக்குக் கொஞ்சம் பக்குவம் கற்றுக்கொடுக்க எண்ணினான். ஆனால் வெறிஏறிய வீணன், சோமுவின் பேச்சை மதிக்கமறுத்தான்.

சாலை ஓரங்களிலே, பொழுது சாய்ந்த நேரத்திலே பார்க்கலாம், போதைகுறைந்தவன் போதைமீறியவனுக்குப் போதகாசிரியனாகஇருக்கும் காட்சியை. மிதக்குடியன்மிஞ்சியகுடியனுக்குமதிஉரைப்பதும், வீதியறிந்த விபசாரி, ஊரறிந்த விபசாரிக்கு உத்தமியாக இருக்கவேண்டும், ஏதோ தவறிவிட்டாலும் கொஞ்சம் மறைதிறை இருக்கவேண்டும் என்று புத்தி புகட்டுவதும், சுவரேறிக் குதிக்கும் சப்பன் வழிப்பறிநடத்தும் வாதனுக்குச் சமயசந்தர்ப்பம்பார்த்து நடக்கச்சொல்வதும், திடீர்ப்புளுகன் அண்டப்புளுகனுக்குப் பொய்யின் கேட்டினைப் புகல்வதும், நாட்டிலே, நடைபெறுவதுண்டு. ஆனால் அதன்விளைவு சச்சரவாக முடியுமே யொழிய, சமரசம் ஏற்பட்டதாகவோ, சன்மார்க்கம் கடைப்பிடிக்கப்பட்டதாகவோ, ஏற்படாது. சோமுவிடம் கந்தனுக்குக் கோபந்தான் வரும், சோமு காட்டும் வழியிலே கந்தன் செல்லமாட்டான்.'

தாங்கள், மோட்டாரிலே செல்கிறீர், மாளிகையிலே வாழ்கிறீர், எனவே மண்மேடுகளிலேயும், மணற்பாதைகளிலேயும் சாலை ஓரத்திலும், சந்துபொந்துகளிலேயும், நடைபெறும் இந்த "ஞானோபதேசக்" காட்சிகளைக் காணச் சந்தர்ப்பம் கிடைத்திருக்க முடியாது. நாடு சுற்றி நமது மக்களின் நிலையை நேரடியாகக் கண்டு, சிந்தையிலே சோகம்கொண்டு, சக்திக்கேற்றஅளவு சமுதாயத்திலேஉள்ள இக்குறைகளைப் போக்குவோம் என்று பணிபுரிவதால், மனப்பிணியாளரின் போக்கினைக் காணும் சமயங்கள் எனக்குண்டு. ஆகவே தான் அவைபற்றிக்கூற முடிந்தது. மிதக்குடியன் மிஞ்சிய குடியனுக்குப் போதனை புரியும்போது, கண்டு கேட்போர் கைகொட்டிச்சிரிப்பர், குருவும் சீடனும் கூடிநடத்தும் கோலாகல நாடகத்தைக் காணீர் என்று கூறுவர். வெறி தலைக்கேறியவனிடம், கொஞ்சம் அளவோடுள்ள குடியன்என்ன சொன்னாலும், இடித்துரைத்தாலும், எச்சரிக்கை விடுத்தாலும், பலிப்பதில்லை. உள்ளே இருந்துதான் ஒருசக்திஅவனைப் பாழாக்குகிறதே, பொங்கும் போதையின் பிடியிலே சிக்கியவனிடம், அமைதி, விவேகம், அடக்கம், நற்குணம் ஆகியவைகளை எங்கிருந்து காணமுடியும்! உதைக்காத கழுதை, குலைக்காத நாய், சேற்றில் புரளாத எருமை, கண்ணைச்சிமிட்டாத கலவிக்கண்டைக்காரி, குளறிப்புரளாத வெறிக்குடியன் இருக்கமுடியுமா? அதை உணரும் அளவுபுத்திவேண்டுமானால், போதை இருக்கக்கூடாது. குடிகாரச் சோமு, குடித்து உருளும் கந்தனைப் புத்திபுகட்டி அடக்கமுடியும் என்று எண்ணினதற்குக் காரணம், சோமுவின் போதைதான்!

★ எம்பிரான் திருவடி சரணம் என்று இயம்பிக்கிடக்கும் காந்திபக்த: திரு. K. வேங்கடசாமி நாயுடுகாரே! தங்கட்கு இக்கடிதம். தங்கள் போன்றார்க்கும், ஆரிய தாசர்கட்கும் உரித்தானதே. ★

இருவர்நிலைஒன்றாகஇருப்பதும்உண்டு, ஒன்றை ஒன்று போட்டியிட்டுக்கொண்டிருப்பதுமுண்டு. அவன்கெட்டான் குடியன், போடுஇங்கே இரண்டு என்பவனும், அந்தப்பயலுக்கு என்னதெரியும், தாங்கவேமுடியாது, கொஞ்சம் உள்ளே போனதும் உருண்டுவிடுவானே கீழே என்றுபேசுவோனும் உண்டு. குடியிலே மட்டுமல்ல, வேறுபலவற்றிலும் இத்தகைய ரகங்கள்உண்டு! கூசாது புளுகுவதிலே போட்டிவந்ததாம் இருவருக்குள் ஒரு சமயத்தில். ஒருவன் சொன்னானாம், "உலகிலேயே எங்கள் தோட்டந்தான் மிகவும் பெரியது! எங்கள்தோட்டத்தின் ஒருபக்கத்திலிருந்துஒருவர்குழல்கொண்டு ஊதினால், மற்றப்பக்கத்திலே இருப்போருக்குச் சத்தம் கேட்காது" என்று. அவனுக்கு விடேகிடையாது! அவனுடன் புளுகும் போட்டியிலே ஈடுபட்ட மற்றவன், சிரித்துக் கனைத்துச் சிரம் அசைத்துக் கரம்நீட்டிச் சொன்னானாம் "இது ஒரு பிரமாதமா! எங்கள் வீட்டுத்தோட்டத்தின் ஒரு கோடியிலிருந்து ஒரு கன்று நடந்து மறுகோடிசெல்ல ஆரம்பித்தால், மறுகோடிசெல்வதற்குள் பசுவாகிவிடும்!" என்று!! அன்றுதாங்கள், சென்னை, இலட்சுமிபுரம் இளைஞர்சங்கக் கூட்டத்திலே பேசினதாக ஒருசெய்தி பத்திரிகையிலே கண்டேன். அதைப்படித்தபிறகு, நான் முன்னால்கூறின எச்சம்பவமும் ஆச்சரியமானதாகத்தோன்றவில்லை எனக்கு! ஏன்? ஆரியமதபோதனையிலே ஆழ்ந்துகிடக்கும் பேர்வழிகளிடம்நீர், சீர்திருத்த போதனை புரிந்திருக்கிறீர், மிஞ்சிக் குடித்த கந்தன் நிலையிலே அவர்கள் இருந்தனர், சோமுபோன்று நீர்காணப்பட்டீர். உம்மைக குடிகாரர் என்று தூற்றுவதாகத் தவறாகக்கருதாதீர். ஆரியம் என்ற போதையைப்பருகியிருப்பதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன், வேறல்ல.

சீர்திருத்தப் பிரசாரத்திலே, ஓய்வு நேரத்தைஒயிலாகக்கழிக்க விரும்பும்சிலர், என்றோ ஓர்நாள், ஏதாவதோர் கட்டடத்திற்குள் கூடுவர், ஒருவருக்கொருவர் புகழ்பொழிந்துகொள்வர், தாம்கற்றதைக்கக்க ஒரு சந்தர்ப்பம் தேடுவர். இது சொக்கட்டான், சீட்டாட்டம்போல அவர்களுக்குப் பொழுதுபோக்குக்கு ஒரு வழியாகஅமையுமேயன்றிச், சமூகத்தைத் தொடாது. அத்தகைய "பெரியமனிதர்கள்" நாட்டிலே அவ்வப்போது எழும் பிரச்சினைகளைப்பற்றி மாலை நேரத்திலே, விவாதிப்பர். வீணருக்கும் இவர்கட்கும் அதிகவித்தியாசம்இல்லை. வீணர், எது நடப்பின் நமக்கென்ன என்று இருப்பர், இவ்விவேகிகளோ, இன்னின்ன விஷயங்கள் இப்படி இப்படி இருந்தால் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம் என்று கூறுவர், காரியமோ செய்யார். ஏழை அழுதகண்ணீர் கூரியவாளொக்கும் என்பதுபற்றி அழகிய சொற்பொழிவு நிகழ்த்

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 25—6—44 ஞாயிறு


## குபேர-குசேலா.

படக்காட்சியல்ல! பாரத்மாதா நாடக மண்டலியாரின் அரசியல் நாடகம், நாம் குறிப்பிடும் குபேர-குசேலா. இந்த நாடகத்தை நடாத்த இதுபோது மும்முரமாக "ஒத்திகை" நடைபெற்றுவருகிறது. ஆகாகான் அரண்மனையிலிருந்து வெளி ஏறிய காந்தியார், இதிலே, நடிக்கத் தயாராகிக்கொண்டிருக்கிறார். இந்நாடகக் கருத்து அவருக்கு இன்று நேற்று தோன்றியதல்ல. என்று அவர், ஆச்ரமம் அமைத்துக்கொண்டு, அரைநிர்வாணக் கோலங்கொண்டு, ஆட்டுப்பால் அருந்தி அந்தராத்மாவுடன் அளவளாவத் தொடங்கினாரோ அன்றேஅவருக்குஇந்தக் குபேர-குசேலாதிட்டம்,தோன்றிவிட்டது. இந்த நாடகம் நடத்தப்பட்டால், கொட்டகையில் கலவரம் விளையுமென்பது [illegible]யின் போக்கையும் நடிகர்களின் நிலைமையையும் அறிந்தவர்களுக்குத் தெரியும், ஆனால் பாரத்மாதா நாடகமண்டலியாருக்குமட்டும் அபாரமான நம்பிக்கை தங்கள் நாடகத்திற்கு நாட்டிலே ஆதரவு கிடைக்குமென்று. அவர்கள் அவ்வப்போது தயாரித்துக்காட்டும் ஒவ்வொரு நாடகத்தின் போதும், நம்பிக்கையுடனேயே கிளம்புகின்றனர், பிறகோ கொட்டகையிலேகூச்சலும் குழப்பமும் ஏற்படும், ஆதரவுகருகிவிடும், ஆசைபங்கமாகும், மோசமான நிலைமை முற்றுமுன்னம், நாடகத்தை நிறுத்திவிடுவர். இதுபோல, "ஒத்துழையாமை" "சத்தியாக்கிரகம்" "உப்பளமுற்றுகை" முதலிய பல நாடகங்களும் நடத்தப்பட்டுக் கைவிடப்பட்டன. இதுபோது, வெள்ளையரை விரட்டும் நாடகம் நடத்தப்பட்டு அதுவும் வீணாகவே, அவசர அவசரமாகக் குபேர-குசேலா நாடகம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

குபேரனும் குசேலனும் ஒன்றாகக்கூடி இந்தப் "பாரதவர்ஷத்தை"ப் பரிபாலிக்க வேண்டுமென்று ஒரு திட்டம் இதுபோது தயாராகிக்கொண்டு வருகிறது. வறுமையிலே மூழ்கி, பிச்சை எடுத்தலன்றி வேறு வாழ்க்கை வழிதேடாது பல பிள்ளைகளுடன் வாழ்ந்தகுசேலருக்கு பொன்னாலான கோபுரங்களும், மணிமாடங்களும் அமைந்த மாளிகையிலே வீற்றிருந்த கண்ணன், கோடி கோடியாகப்பொன்னளித்துக் குசேலரைக் குபேர சம்பத்துடையவராக்கினார், என்று புராணம் கூறுவர். நாம்கூறுவது இதுபோல் புராணப்பிரியர்கள் மனதிலே மூண்டு கிடக்கும் திட்டமேயாகும். செல்வத்துக் காசனும் வறுமையின் வேந்தனும்கூடி இந்நாட்டை ஆளவேண்டுமாம்! அதாவது, குபேரன் போன்ற பிர்லாவும், குசேலர் போன்ற காந்தியாரும்கூடி இந்தியாவை ஆளவேண்டுமாம்! இந்த ஆட்சித் திட்டத்தைத்தான்நாம்,பாரத்நாடகமண்டலியின் புதிய நாடகம் என்றுரைத்தோம். அவர்களின் மற்ற முயற்சிகள் மங்கிப்போனது போலவே, இம்முயற்சியும் மங்கத்தான் போகிறது.

காந்தியார், தம்மை ஏழைகளின் பிரதிநிதி, தரித்திர நாராயணனின் பூஜாரி, என்று கூறிக்கொள்கிறார், ஓலைவேய்ந்த விடுதியிலே வாழ்கிறேன் பாருங்கள், ஒத்தை வேட்டியுடன் உலவுகிறேன் காணுங்கள் மூன்றாம் வகுப்பு வண்டியிலே பிரயாணம் செய்வதை நோக்குங்கள் என்று கூறுகிறார். ஸ்ரீபிர்லாவோ, கோடீஸ்வரர்! வடநாட்டிலே பணக்கோட்டைகள் அமைத்துக்கொண்டு வாழ்கிறார், தென்னாட்டிலே அவருடைய திருப்பார்வையால் தீய்ந்துபோகாதஇடம் அதிகமில்லை. ஆலைகளிலே அவருடைய நாமாவளி! தங்கவெள்ளி மார்க்கட்டுகளிலே அவருடைய திருத்தூதர்கள்! பாங்கிகளிலே, பங்கு அங்காடிகளிலே அவருடைய பரிவாரம்! பத்திரிகைகளிலே அவருக்குப் பராக்குக்கூறும் பேர்வழிகள்! பணந்தான் பாதாளமட்டும் பாயுமாமே! அதனால் இன்று பிர்லாவின் பிடி இல்லாத இடமே இல்லை என்றுகூறும் அளவுக்கு ஆதிக்கம் பெற்று வருகிறார். மேனாடுகளிலே உள்ள தொழிலரசர்களும் வியாபார வேந்தர்களும், தனக்கு ஈடில்லை என்றுகூறும் துணிவும் அவருக்குண்டு. அவருடைய அடைப்பந்தாங்கும் பணியைத் "தேசோத்தாரணகாரியம்" என்று கருதுகின்றனர் காங்கிரஸ்காரர்கள், காங்கிரசுக்குத் திட்டங்கள் தயாராவது அவர் வீட்டுத் தாழ்வாரத்திலே! சட்டமறுப்புக்குச் சல்லடங்கட்டும் சூரர்களுக்குச் சன்மானாதிகள் வழங்கப்படும் இடம், பிர்லா மாளிகை! காங்கிரஸ் முதலமைச்சர்கள் அவர் முற்றத்திலே உறங்கிக் கிடப்பர்! காந்தியார், மீராபாயுடனும், சுசீலாக்களுடனும், சத்காரியாதிகளிலே ஈடுபட்டுச், சரோஜினிகளின் பராமரிப்பிலே இருப்பதும், பிர்லா மாளிகையிலே! அவருடைய ஆட்சியை உடனிருந்து நடத்திவைக்க, தலால் என்னும் தனவந்தரும், தாகூர்தாசர்களும், பஜாஜ்பரம்பரையினரும், உண்டு. ஒரு பத்துக்குடும்பம், இன்று பாரத்வர்ஷத்தின் பரிபாலர்களாகிவிட்டன! இப்படி ஒரு சிலசெல்வக்குடும்பம்பங்கள் ஒருபரந்த நாட்டின் போக்கைத் தமது வரவு செலவுக் கணக்குப் புத்தகத்தையே சட்டமாகக் கொண்டு, மாற்றுவதற்குத்தான், முதலாளித்தனம் என்று கூறுவர், இந்தமுதலாளித்தனத்திடம் முகமன்கூறி, கூப்பிட்டநேரத்திலே அதன் அவையிலே நின்று, கூத்தாடிச், சாமரம்வீசிடுவதற்கு ஒரு அரசியல் கட்சி! இந்தக் கூட்டாட்சியையே நாம் "குபேர-குசேலா" என்று கூறுகிறோம், இதற்கு மேனாட்டார் சூட்டும்பெயர் பாசீசம் என்பதாகும்! இந்த அரசியல் கட்சிதான், காங்கிரஸ். அதன் தலைவர் காந்தியார், "பரம ஏழை சன்யாசி" அவருடைய தோழரும், போஷகரும், பிர்லாக்களே! இந்தக்கூட்டாட்சிக்கு வேலைசெய்வதையே, தேசியப்பத்திரிகைகள் தமக்கேற்ற திருத்தொண்டாகக் கொண்டுள்ளன.

அரசியல்கட்சி-குசேலர் ஒருபுறத்திலே குடும்பக் கஷ்டத்தைக் கூறியபடியும், கோவென்றழும் பாலரைக் காட்டிய படியும், பிச்சை எடுத்தபடியும் நின்று காட்சி தந்தபடி இருக்கிறது.

குபேரனோ-முதலாளிக் கட்சியோ-பத்தாயிரம் கோடி ரூபாயிலே நாட்டுத் தொழிலைவளர்க்கத்திட்டம் தயாரிக்கிறது. பிர்லா திட்டம்என்று இன்று பேசப்படும் பத்தாயிரம் கோடி ரூபாய்த்திட்டம், ஒருநாளைக்கு ஒரு இந்தியனின் சராசரி வருமானம் ஒன்றேகாலணாதான் என்று ஓலமிடும் குசேலக்கட்சி—காந்திகட்சியின் ஆதரவைப்பெறுகிறது! இந்த விந்தையான கூட்டாட்சியை எப்படியேனும் ஏற்படுத்தவேண்டுமென்பதே காந்தியாரின் நோக்கம். பிர்லாக்கள் ஆளவேண்டும், காந்திபக்தர்கள் அந்த ஆட்சிக்கு ஆதரவுதரவேண்டும், நாட்டினர் உழைத்துஉருமாறி, உண்ணஉணவுக்கு என்றும்போலவே கஷ்டமனுபவித்துக் கொண்டு, உயர்ஜாதிக்காரரென ஒருகூட்டத்தைவைத்துக்கொண்டு அதற்கு மற்றவர் உழைத்து அலுத்து, காயமே இது பொய்யடா என்றுபாடி, இறைவன் திருவடிநிழலிலே கலந்திடவேண்டும், இதுதான் பாரதவர்ஷ பாசீசத்தின் திட்டம்! இதற்கான ஒத்திகையே இப்போது நடைபெற்றுவருகிறது.

ஆகஸ்ட்டுத் தீர்மானம்ஆகாகான்மாளிகையிலே காந்தியாரைக்கொண்டுசேர்த்தது, கொக்கிப்புழு அவரைச்சிறைமீட்டுவிட்டது! வெளியேவந்த காந்தியார், வாளாயிருந்தாரா! இல்லை. ஆகஸ்ட்தீர்மானத்தை நான் வாபீஸ்வாங்கமுடியாதுஎன்று கூறுகிறார். வைசிராயுடன் அவர்நடத்திய கடிதப்போக்குவரத்தும், டாடன் ஹாம்துரையுடன் நடத்தியகடிதப்போக்குவரத்தும், பத்திரிகைகளை நிரப்புவது காண்கிறோம். வைசிராய் வேவல், தெளிவாகவே கூறிவிட்டார், காந்திசீடர்களின் கலகத்தைச் சர்க்கார் மறக்கமுடியாது, காங்கிரஸ் அக்குற்றத்தை மறைக்கமுடியாதுஎன்று. 'மகாத்மாக்கள்" தான் எதையும் மறக்கலாமே, சில சமயங்களிலே மதியையுங்கூட! அம்முறைப்படி காந்தியார், ஆகஸ்ட் தீர்மானம் தீங்கற்றது, அதனைத் தீங்குள்ளது என்று கூறினதைச்சர்க்கார்வாபீஸ் வாங்கவேண்டும் என்று கூறுகிறார். காந்தியார் மௌனம், காந்தியார் புன்னகை, சரோஜனி அம்மையாரின்காவல், சுசீலா நாயரின் நாடிப்பரிட்சை, காந்தியார்

கண்டசினியா, அவருக்கு இசை விருந்தூட்டிய நிருபர்கள், என்ற இச்செய்தித் தலைப்புகள் பத்திரிகைகளை நிறப்புகின்றன. கொக்கிப்புழுபோக மருந்துஉட்கொள்ள மகாத்மா மறுத்துவிட்டார், என்றசெய்தி மூன்றுகலத் தலைப்பிலேயும், பின்லாந்தின் துறைமுகப்பட்டிணத்தை ரஷியர் பிடித்துவிட்டனர் கடும்போருக்குப்பிறகு என்றசெய்தி ஒரு மூலையிலும் பிரசுரிக்கப்படுகின்றன, பாசீசப் பத்திரிகைகளால்.

இதேசமயத்திலே, பத்தாயிரம் கோடி ரூபாய்த் திட்டத்தைப்பற்றிப் பிர்லா கூட்டம், பேசிக்கொண்டும், பத்திரிகைகளிலே அறிக்கைகள் வெளியிட்டபடியும் இருக்கிறது. உலகிலே பயங்கரமான போர், அசாம் அருகே எதிரியின் அட்டகாசம், உள்நாட்டிலே உணவுப்பொருள் முடை, இந்தவேளையிலே நடக்கிறது, பாசீசத்தின் பல்லவி. சர்க்காரோ, பாசீசப்பாசறையிலிருந்து தலால் எனும் தனவந்தரைப் பிடித்திழுத்து, பீடத்திலே அமர்த்திருக்கிறது. சர்க்காரின் நோக்கம் பாசீசப்பாசறையிலிருந்து ஒரு படைத்தலைவரை நமதுபக்கம் அழைத்துக்கொண்டோம் என்பதாக இருக்கக்கூடும், பிர்லாக்கூட்டமோ, நமது ஒற்றரை எதிரியின் கோட்டைக்குள்ளேயே அனுப்பிவைத்திருக்கிறோம்என்று எண்ணிடக்கூடும். நமக்கோ, இது முன்னர், பிரிட்டனிலே முதலமைச்சராக இருந்த சேம்பர்லெயின், செய்துகொண்டாரே மூனிக்ஒப்பந்தம், ஜெர்மன் சர்க்காருடன் சமரசமாகப்போக, அதைப்போல இருக்கிறது இந்த நியமனம். எது சரியாகஇருப்பினும், ஒன்று தெளிவாகத் தெரிகிறது, நாட்டிலேபாசீசத்தைவளர்க்கக் காந்தியார், படைதிரட்டிவருகிறார். இந்தச் சமயத்திலாவது, சர்க்கார், விஷயத்தை உணரக்கூடாதா! விஷயத்தை உணர்வது என்றால், இந்தியப்பாதுகாப்புச் சட்டப்படி மீண்டும் காந்தியாரைக் கைதுசெய்வது என்பதல்ல! சர்க்காருக்குப், பாசீசத்தைஅழிக்கும்விதம், சிறைக்குள்ளே பாசீசத்தலைவர்களைத் தள்ளுவதல்ல, என்பது தெரியவேண்டும். பாசீசத்தை ஒழிக்க ஒரேவழிதான் உண்டு, அதுதான் பாகிஸ்தான், திராவிடநாடு, எனும் இனஅரசுகளை ஏற்படுத்துவது. தேளின் கொடுக்கினை நறுக்குவதுபோல, குபேர—குசேலாக் கூட்டாட்சிக்கு இந்தியா பூராவையும் உலவுமிடமாக்கிவிடாமல், எந்த எந்த இனம் எங்கெங்கு பெருவாரியாக இருக்கிறதோ ஆங்கு, இன அரசுகள் ஏற்படவழிசெய்துவிட்டால், பாசீசம் ஒழியும். வேறுவழி இல்லை! பாகிஸ்தானிலே, பிர்லாக்கள் தமது பிடியைச் செலுத்தமுடியாது, காந்தீயர்கள் கோட்டைகள் அமைக்கஇயலாது. திராவிடநாட்டிலும் அவ்விதமே. இந்த இரு பெரும் இடங்களிலே இனஅரசுகள் ஏற்பட்டுவிட்டால், இறைகிடைக்காத மலைப்பாம்புபோலாகிவிடும்பாசீசம், அப்போது அதனை ஒழிப்பது எளியகாரியமாகிவிடும். பாசீசம்இன்றுபரவுகிறது, இதனை உணரமறுக்கும் சர்க்கார், உண்மையிலே மக்களை அதன்பாதகச்சுழலிலேசிக்கவைக்கும் பழியை ஏற்றுக்கொள்கின்றனர். பாமரருக்கு அப்பாசீசம் குசேலனைக் காட்சிதருகிறது, சர்க்காருக்குக் குபேரவடிவிலே காட்சி அளிக்கிறது, முன்வடிவம் பாமரரைப்பசப்புகிறது, இரண்டாம் உருவம் சர்க்காரை மிரட்டிவிடுகிறது. இந்த "நாடகம்" பலிக்குமென்று நம்பியே, காந்தியார் இப்போது மும்முரமாக வேலை செய்கிறார். ஆனால் ஒன்று உறுதி! சர்க்கார் இதனை உணராவிட்டாலுங்கூட, முஸ்லீம்களின் தலைவர் ஜனாப் ஜின்னா அவர்களும், திராவிடர் தலைவர் பெரியார் அவர்களும், இந்தச்சூதின் போக்கைக் கவனித்துக்கொண்டு வருகின்றனர். அவர்கள் கவனிப்பது மட்டுமல்ல, காந்தியாரின் சம்பந்தியார், ஆச்சாரியாரும் இதனைத்தெரிந்து திகைக்கிறார். ஏனெனில் அவர் நன்கு அறிவார், வீறுகொண்ட முஸ்லீம் இனமும், விழிப்புற்ற திராவிட இனமும், இந்த விந்தையான குபேர குசேலா நாடகத்தைக் காந்தீயர்கள் நடத்தத் தொடங்கினால், கொட்டகையில் (நாட்டில்) கூச்சலும் குழப்பமுங்கிளம்பும், நாடகம் நடைபெறாது எனும் உண்மையை! எனவேதான் போலும், ஆகாகான் அரண்மனைக் கதவு திறக்கப்படவேண்டுமென்று கூறிக்கொண்டிருந்த, ஆச்சாரியார், கதவு திறந்து, காந்தியார் வெளிவந்த பிறகு, தன்வீட்டுக் கதவைத்தாளிட்டுக்கொண்டு, வியாசர்விருந்துதயாரித்துக்கொண்டிருக்கிறார்!

---

## ஒழிந்தது இந்தி.

சென்றகிழமை நடைபெற்ற கூட்டத்திலே, இந்திபாடத் திட்டத்தை, வடார்காடு மாவட்டஆட்சிமன்றத்தினர், 'ரத்து' செய்துவிட்டனர். இந்தி ஒழிப்புத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழரின் மீது படிந்திருந்தமாசு துடைத்த மணிகளை மனமாரப் பாராட்டுகிறோம்.

---

## நீத்தார் நினைவுநாள்.

சிதம்பரம்தாலுக்கா சாக்காங்குடி கிராமம் மணமேட்டில் சென்ற ஆண்டு இயற்கையெய்திய உயர்சிங்காரவேல்சாமிகளின் நினைவுநாளாக 20—5—44-ல் ஏழைகளுக்கு மடத்தில் அன்னமளிக்கப்பட்டு தோழர் K. R. தங்கவேலர் அவர்கள் தலைமையில் தமிழர் வாழ்க்கைப் புதுமைபற்றி தோழர்கள் B. கணேசன் B. A; (Hons) V. சம்மந்தம் K. திருமாறன், வெற்றிமால் ஆகியவர் சொற்பெருக்காற்றினர். இயக்க வளர்ச்சிக்காக திராவிடநாடு, குடியரசுக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடை தரப்பட்டது.

## வெங்கடசாமி அவர்கட்கு.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுடன் அவர்கள் எதிர்நின்றுபேசவும் வாதிடவும், வாதத்திலே வெல்லவும் தயாராக உள்ள வேதியர் எவராவதுஉண்டா, கேட்டுச்சொல்லும். ஜெகத்குருசங்கராச்சாரியார் முதற்கொண்டு செகிரிடேரியட் ஐயர்கள் வரையிலும் வந்துவாதிடட்டும் இருதரப்பினரின் வாதங்களையும் பொதுமக்கள்கேட்டுத் தீர்ப்பளிக்கட்டும். இந்த விவாதத்திற்கான அமைப்பை ஏற்படுத்துவீரா! பாதிபோதைகொண்டவன் முழுபோதை கொண்டவனுக்குப்போதனை புரிவதுபோல, ஆரியதாசராகிய நீர் ஆரியச் சிரேஷ்டர்கள் என்று நீர் கருதும் சிலர் முன்பேசிப்பயனில்லை. அவர்களுக்குத்தமது அறிவிலே, ஆண்மையிலே, வாதத்திறத்திலே நம்பிக்கை இருக்குமானால், வரச்சொல்லுங்கள்வெளியே, வாதிட! மூலையிலே கூடுவதும் மூக்காட்டைப்போடுவதும், கூடாது. மக்களிடையே இம்மகானுபாவர்கள் வந்து பேசிப்பார்க்கட்டும். படிக்கப் பணம் இல்லை, உணவுக்குவழி இல்லை, கிழியஇனி இடமில்லை உடைக்கு, தங்கஇடமில்லை, வாழவழியில்லை, சாவோ இன்னமும்வரவில்லை என்று வதைகிறார்களே அவர்களிடம் வந்துநின்று, கூறச்சொல்லுங்கள், இன்னின்ன கோயிலிலே இவ்வளவு கோடிஇருக்கிறது, ஆனால் அரைக்காசும் அதிலிருந்து உங்கட்காகச் செலவிடமாட்டோம் என்று. மக்களின் விழி அதுபோதுகக்கும் கனலிலே, ஆரியக்குலத் தலைவர்களின் ஆணவம் கருகிவிடுவது திண்ணம். வரச்சொல்லுங்கள் வெளியே!

இப்படிக்கு,

**பரதன்.**

---

## ஓட்டம் பெருநடையாய்!

கோஹிமா, இம்பால், அரக்கான்ஆகிய முனைகளிலே அட்டகாசம்செய்துவந்த ஜப்பானியர், நேசநாட்டினரின் தாக்குதலைக்கண்டு, இப்போது ஓட்டம் பெருநடையாய்ப்பின்னோக்கிப் போகின்றனர். அடியும் குழவியுமே ஐரோப்பியப் பகுதியிலே ஆலாகப்பறக்கிறதே, இந்த மஞ்சள்நிறத்தான் என்னசெய்வது!

---

## வெற்றி—விரைவில்!

டெக்ரானில் தயாரித்துள்ள திட்டத்திலேஒருபகுதியே இதுபோதுஅமுலுக்கு வந்திருக்கிறது. முழுத்திட்டமும் நடைமுறைக்குவந்ததும், அச்சுநாட்டுக்கொட்டம் அடங்கும். நேசநாடுகளுக்கு வெற்றி வந்துகொண்டே இருக்கிறது—இறுதி வெற்றி விரைவிலே கிடைத்துவிடும்" என்று பிரிட்டிஷ் முதலமைச்சர் சர்ச்சில் அறிவிக்கிறார்.

## வேங்கடசாமி அவர்கட்கு.

3-ம் பக்கத்தொடர்ச்சி

துவர், எழ்மைபோக வழிவகைதேடவோ முன்வாரார். அவ்விதமானவர்களின் அவைநாடித்தாங்கள்சென்றது காண நான்வருந்துகிறேன், சிலகாலம் நீர்தியாகர் திருத்திய பாதையிலேநடந்தவராயிற்றே என்பதை எண்ணியதால்!

ஜுன் 20-ந்தேதி மாலை, திவான்பகதூர் V. பாஷ்யம் அய்யங்கார் தலைமையிலே நடைபெற்றதாம் ஒரு விவாதக் கூட்டம். திருப்பதி தேவஸ்தானப்பணத்தைக்கொண்டு திருப்பதியிலே ஒரு கல்லூரி ஏற்படுத்தச் செலவிடலாமா, கூடாதா என்பதுபற்றியாம் அந்தவிவாதம்! அதிலேகலந்துகொண்டனராம் கண்ணியர்சிலர். தாங்கள், திருப்பதிநிதியைக் கல்லூரிக்குப் பயன்படுத்தலாம் என்று பேசினீராம். ஆனால் தலைவரும் மற்றும் சிலரும் மறுத்தனராம. இறுதியிலே, திருப்பதி கோயில்நிதியைக் கல்லூரிக்காகச் செலவிடுதல்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்! சங்கம் இருக்கும் இடம் கீழ்ப்பாக்கமா? என்று கேட்டார் ஒரு தோழர். தெரியாது என்றேன் நான். ஆனால் திகைத்தேன். எவ்வளவு துணிவு, இவ்விதமான தீர்மானத்தைநிறைவேற்ற!! பிறகு சிந்தித்தேன், சோமு கந்தன் சம்வாதம் போன்றது தானே இதுஎன்று புலப்பட்டது!

ஆரியபோதையை நீரும் பருகிஇருக்கிறீர், ஆனால் கொஞ்சம்அளவு இருக்கிறது, ஆகவே நிலைமை மோசமாகவில்லை. உமது போதனையை மறுத்தவர்கள், மிதமிஞ்சிப்பருகியிருக்கிறார்கள் ஆரியமெனும் போதையை! எனவேதான் உமது போதனை அப்போதைமீறிய பேதையர்க்கு ஏறவில்லை. ஒருமுறைச் சுயமரியாதைச் சவுக்குகொடுத்தால், அவர்கட்கு அப்போதை கொஞ்சம் தெளியும் அதுதான் இது.

“யாத்ரீகர்களிடமிருந்து வசூலிப்பதால் கிடைத்ததிருப்பதி தேவஸ்தானப் பணத்தை யாத்திரிகர்கள் ஆதரிக்கும் காரியங்களுக்கே செலவழிக்கவேண்டும். ஏற்கனவே உள்ள பள்ளிக்கூடங்களை நன்றாகப் பராமரித்தல், திருப்பதி மலைமீதுள்ள கிராமத்தைச் சீர்திருத்துவது, திருப்பதியின் பொது சுகாதாரம், தண்ணீர் சப்ளை, ஆகியவற்றை அபிவிருத்திசெய்வது, யாத்ரீகர்கள் தங்கப் பல சௌகரியங்கள்செய்து கொடுத்தல் முதலியவற்றிற்கே தேவஸ்தான நிதியை முக்கியமாகச் செலவிடவேண்டும். இதற்குப்பிறகு பாக்கியிருந்தால் பாழடைந்த கோயில்களை மராமத்துச் செய்யலாம்.”

சாந்தமாகச் சாவதானமாகக் காரண காரிய விளக்கத்தோடு, காரமின்றிக்கோபமின்றி, எடுத்துக்கூறினீர், அறிவை. அந்த அறிவு என்ன பயனை அளித்தது? பக்குவமாகப் பேசினால் பலன் உண்டாகும் என்றுச்சிலர்கூறுவதுண்டு தன்மான இயக்கத்தாரிடம். நீர் பக்குவமாகமட்டுமல்ல, பணிவோடும் பரிவோடும், பயபக்தியோடும் பேசியிருக்கிறீர். மாஜிநீதிபதியின் முன்னிலையிலே பேசுகிறோமே, நீதிகிடைக்கும் என்று நம்பினீர். அறிஞர் உலகிலே நடமாடும் முதியோர் இந்தப் பிரச்னையிலே, நியாயம் வழங்குவார் என்று நினைத்தீர். பார்ப்பனராகப் பிறந்தும், சேரியிலுள்ள மக்களிடம் அன்பு காட்டும் செம்மலாயிற்றே, அவர் தலைமை வகித்து நடத்தும் கூட்டத்திலே, கோயில் பணம் கல்லூரிக்குச் செலவாவது சரியே என்று தீர்ப்புக் கிடைக்கும் என்று எண்ணியே, அவ்வளவு அன்புகலந்த அறிவுரைபேசினீர். அவ்வளவும் ஆரியச்சிரேஷ்டரை அசைக்கவில்லை! ஆரியபோதையைக் குறைக்கவுமில்லை. தீர்ப்பு, திமிர்பிடித்த விதமானது. கோயில் பணத்தை வேறுகாரியத்துக்குப் பயன்படுத்துவது கூடாது என்பது தீர்ப்பு! இதிலிருந்து அவர்கட்கு ஆரியப்போதை இருப்பது தெரிவதுமட்டுமல்ல, தாங்களும் ஆரியபோதையிலே இருப்பதனாலேதான், போதனையால் அவர்தம் போக்கை மாற்றிவிடமுடியும் என்று கருதினீர். நெற்றியிலே திருநாமமும் நினைப்பிலே திருப்பல்லாண்டும், கொண்டு பாகவதகோஷ்டிக்குப் பாதபூஜைசெய்து, காணிக்கை தந்து கைகட்டி நின்று, ஆழ்வார்என்றோ பக்தன் என்றோ, ஆச்சாரத்திலே இலயித்துள்ள பரம பாகவதனென்றோ, பார்ப்பனர்வாயினால் பட்டம் பெற்றுவிட்டால் உச்சி குளிர்ந்துவிடும் பண்புடன் உள்ளவர் தாங்கள் என்பதை, நானறிந்தவன். என்போன்ற சுயமரியாதைக்காரர்கள் சுடுசொல்புகல்வதாலேயே, காரியம் கெட்டுவிடுகிறதென்றும் இதமாக எடுத்துரைத்தால் எதையும் 'சாதிக்கலாமென்றும் எமக்குரைக்கும் அன்பர்களைக்கேட்கிறேன் இதோ பரமபாகவதர் வெங்கடசாமி நாயுடுகார், வீரவைணவர், வேதியகுல நண்பர், திருமண் அணியும் திருவினர், தீப்பறக்கப் பேசாதவர், திருப்பணிகட்குப்பணம் உதவும் பண்பினர் அவர், அடக்க ஒடுக்கமாகப் பேசியதற்குக் கிடைத்தபதில் என்ன! ஆணவம்!!

கோயில்களைக்கட்டவும், அவைகளுக்கு மானியங்கள்விடவும், தமிழர்கள்! ஆனால் சொத்து, கல்விக்கும் செலவிடப்படக்கூடாது, ஆரியத்தைக்கொழுக்கவைக்கவே பயன்படவேண்டுமென, மேனாட்டுப் படிப்புப்படித்தும், ஆரியத்தைக் கைவிடாத அசந்தையினர் கூறிவிடுகின்றனர். இந்நிலையிலே அவர்களிடம் எத்தனை காலத்துக்குச் சமரசம் பேசிக்கிடப்பது. எதற்காகத் தங்களைப் போன்றதனவான்கள் இன்னமும் அத்தகைய தருக்கரின் திருவடிபணிந்து. பணம்தந்து வளர்க்கவேண்டும்! ஏன், ரோஷம் பிறக்கவில்லை? நீதிக்குக்கட்டுப்பட மறுப்போருடன் என் குலவிக்கிடப்பது? அறிவே தெய்வம்! அன்பே தெய்வம்! என்றுகூறுபவர்கள், அதே அறிவுக்கும் அன்புக்கும் அரைக்காசும் செலவிடக்கூடாது, அன்னவகைகளுக்கும் அதிர்வெடிகளுக்கும, வேதமோதும் வீணருக்கும் தரகு செய்யும் தருக்கருக்கும் ஆடம்பரத்திற்கும் அக்கிரகார வளர்ச்சிக்குமே செலவிடப்பட வேண்டுமென்று கூறுகிறார்கள், கூசாது. அவர்தம் கூற்றைக் கேட்டுக்கொண்டே, உதைக்கும்காலுக்கு முத்தமிட்டுவாழ்வது, முறையா! திவான் பகதூர் பாஷியம் ஐயங்கார்களின் எண்ணமே இதுபோலஇருக்குமானால், சாதாரண மடிசஞ்சிகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ! அவர்களைக்கொண்டு அறிவுக்கு ஆட்சி ஏற்படுத்தமுடியும் என்று நம்புகிறீர்களே, இது ஆரிய போதையின் பயனன்றிவேறென்ன! பாடுபட்டுத்தேடிய பணத்தைக் கேடுகெட்ட பான்மையினருக்குக் கோட்டைகட்டிக் கொள்ளக் கொடுத்துவிடுவானேன், கொடுத்துவிட்ட பிறகு, கும்பிட்டுக் கூத்தாடி, பிச்சை கேட்பானேன்? ஒரு இலட்சமா, ஒரு கோடியா, எத்தனை கோடிபணம், இந்தத் திருப்பதிபோன்ற இடங்களிலே முடங்கிக்கிடக்கிறது! எவ்வளவு மக்களின் வாழ்வுபாழாகி விடுகிறது பணவசதியின்றி! இதனை எவரும் அறிவரே, எல்லாம் அறிந்தவராமே பார்ப்பன மணிகள் அவர்கட்குத் தெரியாதா! என் பின்னர் அவர்கள். ஆலயப்பணத்தை அறிவுக்குப் பயன் படுத்துவதாகாது என்றுகூறுகின்றனர். மமதை! சுயநலம்!! கிலி!!

தமிழருக்குத்தாங்களே குருமார், எனவே, தங்கள்சொல்லுக்குத் தமிழர் அடங்கித்தீர வேண்டும் என்ற மமதை. இது தங்கள் போன்ற “திருவடி தாங்கிகளால்” வளர்ந்தது. கோடி கோடியாக இன்றுள்ள பணம் மட்டுமல்ல, பக்தியின் பெயரால் எதிர்காலத்திலும் பலகோடி ரூபாய்கள் பாமரரால் செலவழிக்கப் படுமானால், அதன் பலனை ஆரிய இனந்தானே அனுபவிக்கும், அதனைக்கெடுத்துக்கொள்ளலாமோ என்ற சுயநலம்! ஆலயப்பணத்தைக்கொண்டே அறிவை வளர்த்துவிட்டால், பிறகுக்கோயிற்பெருச்சாளிகளாகிய ஆரியருக்கு ஆதிக்கம் இராதே என்ற கிலி! ஆக, மமதை, சுயநலம், கிலி, என்பவைகளால் உந்தப்பட்டு ஆரிய புத்ரர்கள் அன்று லட்சுமிபுரம் சங்கத்திலே, தங்கள் வாதத்தைக் கவனிக்க மறுத்துவிட்டனர். இதுபோல, ஆரிய போதையிலே மட்டும் தாங்கள் வீழாமல் திராவிட வீராகநின்று, பேசியிருந்திருப்பீரானால், விளைவு வேறாகவேஇருந்திருக்கும். இப்போதும் என்ன? வீறுகொண்ட திராவிட மாணவர்கள் இருவர் மூவர் அங்குவந்தோ எங்காயினும்சரியேநின்றோ வாதிடத்தயார். ஆலயங்களிலே உள்ள பொருளை மக்களுக்காக்கவேண்டுமென்ற

(5ம் பக்கம் பார்க்க)

# கலை யாருக்கு?

(நாரா)

இப்போதெல்லாம், எங்கே பார்த்தாலும் "கலை", "கலை", என்றஒரேபேச்சாரவாரந்தான். கலையைப்பற்றிக் கதைப்பதிலே ஒருதனிப்பெருமை. தனதுமேதையைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொள்ள நினைக்கிற ஒவ்வொரு சுயநலமியும், சூழ்ச்சிக்காரனும், "கலை" என்றசொல்லை வைத்துக்கொண்டு தனது காரியத்தைச் சாதித்துக்கொண்டு, அப்பாவிகளைஏமாற்றிப் பிழைக்கமுயலுகிறான்.

### கலை, எது?

இந்தக் "கலை" தான் என்ன? வேதம் சாத்திரம், மந்திரம் போன்ற ஒரு புராணப்பித்தலாட்டமா? இல்லை! நிச்சயமாய் இல்லை! ஆனால், அறிவுக்குறைவாலோ, அல்லது அறிவிருந்தும் பிறனை வஞ்சித்து வாழ நினைக்கிறவர்களின் சூழ்ச்சியாலோ, கலையும் ஒரு பித்தலாட்டமாகிக் கொண்டு வருகிறது உடம்புக்கு உயிர் முக்கியம்;-உடம்பை உயிர்வாழச்செய்கிறதுஉயிருக்கு (வாழ்வுக்குக்) கலைமுக்கியம்;-உயிரை இன்பகரமாய்ஆக்குவிக்கிறதுகலை.உயிர்-மூச்சு காற்று எங்கும் இருக்கிறது. கலையும் எங்கும் இருக்கிறது.

கற்றுக் கற்று, வளர்ந்து முன்னேறுவதே கலை. நமது வாழ்வைஇன்பமயமாக ஆக்குவது கலை, நமதுவாழ்க்கைத் தரம் வளர்ந்து,முன்னேறமுன்னேற நமதுகலையும்-நாம்நமது வாழ்வைசெம்மைப்படுத்துவதற்காகக்கற்றுக்கற்றுத் தெரிந்துகொண்டிருப்பவை-முன்னேறும். நமது வாழ்க்கையும், கலையும் சமமாய்க் கைகோர்த்து, முன்னேறிக்கொண்டே போகவேண்டும். வாழ்க்கைத்தரம் முன்னேறாவிடில், கலை முன்னேற முடியாது. அப்படி முன்னேறியிருப்பதாகச்சொன்னால், அது வெறும் கற்பனையான, பிசகான சொல்லாட்டமாய்த் தானிருக்கமுடியும்.

### முன்பு கலையும், பொருளும்.

முன் ஒருகாலத்தில், நந்தமிழ்நாட்டிலே நமதுமக்களின் பொருளியல் நிலை நன்றாயிருந்தது.எல்லாருக்கும்வேலைகிடைத்தது எல்லாருக்கும் குறைவில்லாமல் வயிற்றுக்குக்கிடைத்தது. வீடு, வாசல் ஒன்றுக்கும் குறைவில்லை, அப்போது சோற்றுக்குப் போராடவேண்டிய கட்டாயமில்லை. மக்கள், எற்றுக்கெனவே குறைகாண இடமில்லாத தமதுவாழ்வில் மேலும் மேலும் நிலையான, நுண்பொறிகட்கு இன்பம் ஊட்டக்கூடிய வழியிலே எல்லாத்துறையிலும் சென்றனர். மொழிக்கலையில் முன்னேறி, அறிவும், அழகும், உண்மையும் செறிந்த இலக்கியங்களையும் பாக்களையும் ஆக்கினர். இசைக்கலையில் முன்னேறி உள்ளத்தைக் குழைந்து பூரிக்கச்செய்யும் பண்களையும், பாசுரங்களையும் இசைத்தனர். நாடகக்கலையில் முன்னேறி, மக்களின் வாழ்க்கையில் இணைந்து பின்னிக்கிடக்கும் உணர்ச்சிகளையும், உள்ளக்கிடக்கைகளையும் உயிர்த்துடிப்போடு நடித்துக் காட்டினர்.

### இன்று—?

சமீபகாலத்தில் நாம்கலைக்காக என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்யத்தான் முடியும்? நமது தினசரி வாழ்க்கைக்கும் நாம் பெருமை பார்த்துக்கொள்ளும் கலைக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? நம்மவரது பொருளாதார நிலை பாழ்பட்டுக்கிடக்கிறது. நம்மவரில் பெரும்பாலாருக்குச் சோற்றுக்கு வகைசெய்வதே பெரிய கலையாயிருக்கிறது. கல்வி அறிவோ, ஆண்களுக்கே அப்படி அப்படித்தான். பெண்களுக்கோ அதுதானுமில்லை, கவலையே கலையாக இருக்கிறது. கலைக்கு அடிப்படை பொருளாதாரம்.

வயிற்றுக்கலைதான் இன்றும், அன்றும், என்றும் கலைகள் எல்லாவற்றுளும் மாபெருங்கலை. இது நையாண்டியல்ல, உண்மை! கலைக்காக வாழ்கிறேன், கலைக்காக உயிரைவிடுகிறேன் என்பதெல்லாம் வெறும் கலப்பற்ற பித்தலாட்டமே!

ஆங்கிலப் பெரும்புலவர் ஷேக்ஸ்பியர் எழுதிவைத்த இலக்கியச் செல்வங்கள் சோற்றுக்கு வழிசெய்ய அல்லாமல்வேறு எதற்கென்று சொல்லுகிறீர்கள்? கம்பன், காளிதாசன், பாரதி—எல்லாருமே சோற்றுக்காகக் கலைஞரானவர்கள் தான். வாழ்க்கை இன்பங்களை யெல்லாம் வலியத்தியாகம் செய்துவிட்டுக், கலைக்காகப் பாடுபட்டு வாழ்ந்துவந்தவர்கள்யாருமில்லை. சிலர் பச்சையாய்த்தமது வறுமையையோ, தேவையையோ ஒப்புக்கொண்டிருப்பார்கள். பிறர் நாசுக்காய் மெருகிட்டு ஏய்ப்பார்கள்.

கலை பெரும்பாலான மக்களது வாழ்விலே இன்பம் பயக்கவேண்டும். அதுவே, உண்மைக்கலை, ஒருசிறு குழுவுக்கு மட்டுமே உபயோகப்படக் கூடிய கலை உண்மையான கலையல்ல. சோற்றுக்கவலை ஒழிந்தால்தான், மனிதனுக்கு அவகாசம் ஏற்படும். மனம் விரிந்து மேலே எழும்பும். அப்போதுதான், அறிவுப்பசி எடுக்கும், அப்போதுதான்,, பதிய, புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். வாழ்க்கைச் சாதனங்களை மேலும் மேலும் வளர்த்து, நயப்படுத்திக் கலைப்படுத்த முடியும்.

### கலை யாருக்கு?

பொருளாதாரத்துறையில், பல்லாண்டு பல்லாண்டாய்த் தாழ்த்தப்பட்டுத், தனது தினசரி வாழ்க்கையில் இன்றியமையாத தேவைக்குக்கூட வகைசெய்ய வழிதெரியாது தவிக்கும் தமிழனுக்கு இன்று வேண்டுவது இலக்கியப்பூங்காவல்ல. கம்பன் கவி நயமல்ல. தமிழிசைச் சண்டையல்ல. பரதநாட்டியத்தின்பாவமும், புண்ணியமுமல்ல. தமிழனுக்கு இன்று வேண்டியது. சோறு; உடை, வீடு, வாசல்,—நிம்மதியான, சந்தோஷமான குடும்ப வாழ்க்கை நடத்த உதவக்கூடிய அடிப்படை வசதிகள். விஷயந் தெரிந்தவர்கள் பாடுபடவேண்டியது பொருளாதார, சமுதாய விடுதலைக்கும், சீர்பாட்டுக்கும் வளர்ச்சிக்குமே. இவை வந்துவிட்டால். கலைதானே வந்துவிடும். கஞ்சிக் கவலையால் கருகிப்போயிருக்கும் உள்ளத்திலே கலை வளர்வதெப்படி? கஞ்சிக் கவலை ஒழிந்தால், கலையானதுதானே தனது உரியஇடத்தைப்பெற்றுவளர்ந்து,மேலும் மேலும் இன்பஊற்றைவாரி இறைக்கும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு.

மேளக் கச்சேரிகளுக்கோ, அல்லது ஊர்கோலங்களுக்கோ தனித் தவுல் வைக்கவிரும்புவோர் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதித்தெரிந்துக்கொள்ளவும்.

பால நந்தீஸ்வர பூஷண

தவுல்

என். பி. இராகவன்,

நாச்சியார் கோவில்,

கும்பகோணம்.

## "கிந்தனார்"

நகைச்சுவை அரசர் தோழர் N. S. கிருஷ்ணன் அவர்கள் 'கிந்தனார்' காலட்சேபத்தை 20—6—44ல் வடாற்காடு திருவந்திபுரத்திலே விமரிசையாகநடத்தினார். பத்தாயிரம் பேருக்குமேல் மக்கள் அந்த வட்டாரத்திலிருந்து வந்திருந்தனர். செஞ்சிலுவைச் சங்க நிதிக்காக 20000 ரூபாய்க்குமேல் இதன்மூலம் கிடைத்தது. கதை துவங்குமுன்பு, தோழர் கந்தசாமி அவர்கள் தோழர்N.S. கிருஷ்ணன் அவர்களை வரவேற்றுப் பேசினார். ரெவன்யூ டிவிஷனல் ஆபீசர் வந்தனங் கூறினார். இரவு11-மணிக்குமேல் தோழியர் T P. இராஜலட்சுமி கோஷ்டியார் 'வள்ளி" நாடகம் நடத்தினர்.

## ஆள் இருக்கிறது!

ஓட்டியில்லா விமானங்களைக்கொண்டு குண்டுவீசச்செய்து, ஜெர்மானியர்,பிரிட்டனை மிரட்டப்பார்க்கின்றனர். ஆனால் ஆளில்லா விமானங்களைச்சுட்டுக் கீழே வீழ்த்த பிரிட்டனிலே திறமையுள்ள ஆட்கள் உண்டு என்பதை ஜெர்மானியர் தெரிந்துகொண்டனர்.

## அவசரப்படுங்கள்!

1ம் பக்கத் தொடர்ச்சி.

தானுமே தமிழன், இன்று சொந்த நாட்டிலும் சகம்பெறஅறியாது, மலேயா பர்மாவில், பினங்கு சிங்கப்பூரில் செத்த வாழ்வு வாழ்கிருனே அது ஏன்? அகிலுந் தேக்கும் அழியாக் குன்றம், அழகாய் மூத்துக் குவியும் கடல்கள், முகிலுஞ் செந்நெலும் முழங்குநன்செய் முல்லைக் காடு மலைக்கும் நாடாமே அன்றைய திராவிடம், இன்று எங்கே போயின அந்த வளமும் வாழ்வும்? படைபல படைத்து நாடாண்ட தமிழன் இன்று வீடாளவும் வகையின்றி வதைவது ஏன்? இயற்கை இன்பத்தை இனநலத்தைப்பாடிய தமிழன் பொய்யைப் புளுகைப் புராணத்தைப்பாட நேர்ந்தது எதனுல்? அகத்தில் புறத்தில் வாழ்க்கை நுணுக்கங்களிற் சொல்லோவியங்கண்ட தமிழ்ப்புலவர், "ஆண்டவன் லீலை"களிலும் "அந்தலோக" வாழ்வினிலுமேகவிச் சுவை காணத்தலைப்பட்டது யாரால்? ஆரியம் செந்தமிழகத்திற் புகுந்து தமிழர் சிந்தையைச் சிதைத்ததால் விளைந்தகேடு இவை எனில் இல்லை என்பார் யார்?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றுரைத்த தமிழன் இன்று சாதிமதச் சுழலிற்சிக்குண்டது ஆரியரால். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று வாழ்ந்த தமிழகம் எண்ணத் தொலையாக் கடவுளரும் எட்டிலடங்காச் சாதிகளும் உறையுமிடம் ஆனது ஆரியர் புராணங்களால், "யாதும் ஊரே யாவருங்கேளிர்", என்ற அழகுமொழி அரசாண்ட திராவிடத்தில் தீண்டாமையும் பாராமையும், நெருங்காமையும் தொடாமையும் வந்துற்றகாரணம் ஆரிய வர்ணாஸ்ரமதர்மத்தால். கோயிலும் கற்சிலையும் கும்பாபிஷேகமும் நுழைந்தன ஆரிய ஆட்சியால். அந்த ஆரிய ஆட்சி அழிக்கப்பட்டாலன்றித் திராவிடஇனத்திற்கு விடுதலை எது? ஆகவேதான் பெரியார் பொன்மொழி புகல்கிருர் அவசரப்படுமின், அவசரப்படுமின் என.

இமயத்திற் புலிபொறித்த கரிகாலன் சந்ததியினர் நாம். கங்கையை ஆட்சிகொண்ட இராசேந்திரன் பின்னவர்நாம். ஆரியவர்த்தத்தில் அருந்திறல் காட்டி, வடவாரிய மன்னர்கள் தலைமீது கண்ணகி சிலைக்கு இமயத்தினின்று கல்கொணர்ந்த சேரன் செங்குட்டுவனின் செவ்விய பரம்பரையினர் நம் இனத்தவர். பர்மாவைப் படையெடுத்தாண்ட நாடு நம்நாடு. இலங்கையை அடிப்படுத்திய தமிழகம் இது. கடலாட்சி என்று வரலாற்றினர் இன்னும் புகழுமளவு கடற்படை மிகப்பெற்றசோழர் கடலோச்சிய தோட்டம் இந்நாடு. குவிகின்ற பொன்பொருள் செந்நெல் எலாம் இங்குக் குறையிலவாம் என்று புலவர்கள் பூரிப்புடன் புகன்றனர் அந்நாள். அத்தகைய வளநாடு இன்று தாழ்ந்ததுயாரால் யாரால் என்ற வீர முழக்கம் திராவிடமெங்கும் ஒலிக்கச் செய்துவிட்டால் அதன் எதிரொலி திராவிட ஆட்சியன்றி வேறு என்னவாயிருக்கும் என்று கருதுகிறீர்கள். அந்தத் திராவிடவட்டாரம் அமைக்கத்தானே பெரியார் ஆணையிடுகிருர், அவசரப்படுங்கள் அவசரப்படுங்கள் என்று. எங்கே தோழரே உங்களுடை ஒத்துழைப்பு?

## நோயறியா மருத்துவன்!

(புதுவைச் சிவம்.)

தமிழ்காப்போம் தமிழர்நலங் காப்போமென்று
தருக்கேற்றுப் பேசவந்த புலவ, கேள்நீ!
தமிழழிகத் தமிழர்நல மழிக்க அன்று
சதிகாரர் போதித்த போதைக் கொள்கை
சுமைசுமையாய் உன்னுள்ளத்தில் ஊற்றெடுக்கச்
சுடரறிவும் உனைக்கண்டு விலகி நிற்கத்,
'தமிழ் காப்போம் தமிழர்நலம் காப்போ' மென்று
சாற்றுவதிற் சிறிதேனும் பொருளுண்டா?

உனையிந்நாள் ஒருதமிழன் எனவே சொல்லி
உவப்பதற்குச் சங்கத்தார் கலைக ளன்றிப்
பினர்வந்த புராணங்கள் இதிகா சங்கள்
பேசிடுபல் சாத்திரங்கள் ஆய்வ துண்டோ?
நனியிழிவு தருமூடக் கொள்கை வாய்ந்த
நஞ்சனைய நூல்களைநீ யொழித்தி டாமல்,
வினைதருஉம் புண்ணுக்குச் சீலை மூடி
மெருகிட்டுப் பேசுவதால் பயனுண்டாமோ?

நோய்கொண்டான் ஒருவனது துயர்கண்
டன்னோன்
நோயறியா ததற்கேற்ற மருந்து மின்றி,
நோய்தீர்ப்பேன் எனமுயலும் மருத்துவன்தன்
நுண்ணறிவு கண்டுலகம் சிரித்திடாதோ?
தூய்மையுடன் நலம் பலவும் வாய்ந்த மேனித்
தொல் தமிழ்த்தாய் சாக்காட்டு நிலையைக் கண்டே
வாய்ந்த அன்னாள் பிணிதீர்ப்பேன் என்றுசொல்லி
வாய்வீரம் பேசுவதால் நலனுண்டாமோ?

உன்தாயை ஆரியநச் சரவு தீண்ட
உடல் சோர்ந்து கீழ்விழ்ந்தாள், சாகும்நேரம்!
அன்னதனை யறியாமல், காய்ச்சலுக்கே
அளித்திடு நல் மருந்தெடுத்துச் செல்லுகின்ருய்!
என்னஇது விந்தை! அவள் நோயைச்சொல்லி
ஏற்றதொரு மருந்துரைத்தால் கோபமேனே?
பின்உன்றன் அறியாமைக் கிரக்கங்கொள்வாய்
பெற்றவளின் உயிர்போகத் துணையாகாதே!

ஆரியப் பாம் பளித்தவிஷம் தீரவேண்டின்
அறிவென்னும் மாத்திரைமுன் தருக! பின்னர்ச்
சீரற்ற ஒழுக்கங்கள் வழக்கம் சாதி
தியமத பேதங்கள் சாத்தி ரங்கள்
நேரற்ற புராணேதி காசம் என்னும்
நீள்துன்ப வேதனைகள் முற்றும் தீரப்,
பேருற்ற தொண்டென்னும் தைலம் பூசின்
பிழைத்திடுவாள் இன்றேல்நீ பழியை ஏற்பாய்!

### பூண்டி தேக்கம்.

பூண்டி தண்ணீர் தேக்கத்தை மே. கவர்னர், சர். ஆர்தர்ஹோப் அவர்க திறந்துவைத்தார்.

### புரட்சித் திருமணம்.

வடஆற்காடு ஜில்லா செய்யா தாலுக்கா 99—நெ. நமண் கிராமத்தில் (22–6–44) விய ழக்கிழமை காலை 9-மணிக் தோழர் T. P. S. பொன்னப் ஞர் அவர்கள் தலைமையி தோழர் M. ஆறுமுகம் அவ களுக்கும் தோழியர் முருக அ மையார் அவர்களுக்கும் புர சித் திருமணம் நடைபெற்றத அவ்வமயம் தோழர்க C. K. குப்புசாமி, A. கணே சன், இஸ்மாயில், கண்ணன் N. ஏகாம்பரம், S. ருத்திர பா, பெங்களூர் நடேச கணேசன் முதலியோர்க சொற்பொழிவாற்றினர். தே ழர் பொன்னுசாமி நன்றிக லுடன் திருமணம் இனி முடிந்தது.

### சேலம் திராவிட இளைஞர் மாநாடு.

மேற்படி மாநாடு 17, 18- தேதிகளில், முறையே தோழ திருப்பூர் S. R. சுப்பிரமணிய தில்லை அன்பழகன் ஆகியவ களின் தலைமையில்சிறப்புறந தேறியது. தோழர்கள் நெடு செழியன், A. பொன்னம்ப ஞர், C. P. சின்னராஜு ஆ யோரும் மற்றும் இயக்க அ பர்கள் பலரும் அரிய சொ பொழிவுகள்நிகழ்த்தினர். பெ தாம்பாளையம் தோழர் P. ப ணிச்சாமி அவர்கள் சேல ஜில்லா, திராவிடர் கழகத்தை துவக்கிவைத்தார்.

### அதிசயம், ஆனல் உண்மை!

கஸ்தூரிபாய் நிதிக் கமி டிக்கு இராமநாதபுரம் வட் ரத்திலே தலைவராகச் ச குமாரராஜா முத்தையசெ டியார் நியமிக்கப்பட்டிருக் ருர்!

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.